IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 56/2022

Deposition of Witness : DW 1

Name : கோபால் (வயது – 62)

Father's Name /W/o : த/பெ பொன்னுசாமி

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : பெருங்களத்தூர்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 22.09.2025.

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ – 13 0.95 செண்டில் பொதுவில் 32 செண்ட் போக மீதமுள்ள சொத்து என் சித்தப்பாக்கள் கணேசன் மற்றும் ஆறுமுகத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் இல்லை. மீதி யாருக்கு சொந்தம் என்றால் என் தந்தை பொன்னுசாமிக்கு சொந்தம். 95 செண்ட்க்கு முழுவதுமாக என் தந்தை பொன்னுசாமி பெயரில் பட்டா உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி பட்டா இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பழனி என்பவர் யார் என்றால் என் சகோதரர் ஆவார். சாமந்தி யார் என்றால் என் சகோதரி. அஞ்சுகம் யார் என்றால் என் சகோதரி ஆவார்.

2. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ – 13 படி 32 செண்ட் மற்றும் 30 செண்ட் என் தகப்பனார் சுப்பிரமணி என்பவருக்கு விற்று விட்டது என்றாலும் மொத்தம் 62 செண்ட் விற்பனை செய்யப்பட்டது என்றால் 30 செண்ட் சுப்பரமணி நாயக்கருக்கு விற்றார்கள். 57 3/4 செண்ட் டிரஸ்ட்க்கு எழுதி வைத்தோம்.

3. நான் தாக்கல் செய்த ஏ.எஸ் எண்.07/2015 தீர்ப்புரையில் வாதி 1988 ஆண்டில் மேற்படி ஏ.எஸ் எண்.07/2015 பிரதிவாதிகள் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் பேசப்பட்டு சொத்துக்களை பாகம் பிரித்துக்கொள்ளப்பட்டது என்பதை காட்டுவதற்காக சாட்சிகளை விசாரித்தார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஏ ரிஜிஸ்டர் இல் உள்ள விபரங்கள் சரியா என்றால் இல்லை தவறு. ஏ.எஸ் எண்.07/2015 எப்போது தீர்ப்பானது என்றால் 2016 ஆம் ஆண்டு தீர்ப்பானது.

4. மேற்படி தீர்ப்பானதற்கு பிறகு தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் என் அனுபவத்தில் தான் உள்ளது என்பதற்கு இன்றைய தேதிவரை பட்டா, சிட்டா, அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை ஏனென்றால் வருவாய் துறை அதிகாரிகள் விசாரணை நடத்திய பிறகு இன்னும் மேற்படி ஆவணங்களை தரவில்லை. வாதி தரண்சாய் தாவா சொத்தில் வாங்கிய பிறகு கம்பி வேலி போட்டார்கள் என்றால் நாங்கள் போட்ட வேலியை எடுத்துவிட்டார்கள் அவர்கள் கம்பி வேலி எதுவும் போடவில்லை. தற்போது முள் வேலி உள்ளதா அல்லது காலியாக உள்ளதா என்றால் காலியாக உள்ளது.

5. நான் எந்த வருடத்தில் முள் வேலி போட்டேன் என்றால் 2016க்கு பிறகு போட்டேன் வருடம் சரியாக ஞாபகமில்லை. எந்த வருடத்தில் முள் வேலி இடித்தார்கள் என்றால் 2024 ஆம் ஆண்டில் இடித்தார்கள். மேற்படி சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் புகார் அளித்தேன். மேற்படி புகார் மனு இந்நீதிமன்றத்தில் தாககல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. வாதி நான் போட்ட முள் வேலியை இடித்த விபரம் மற்றும் காவல் நிலையத்தில் நான் அளித்த புகார் விபரம் என் பதிலுரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை என்றால் ஞாபகமில்லை.

6. வாதி அவரது அனுபவத்தை காட்ட பட்டா , சிட்டா மற்றும் அடங்கல் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் மேற்படி ஆவணங்கள் போலியானது அவை என்னை கட்டுப்படுத்தாது. மேற்படி ஆவணங்கள் பொய் என்பதற்கு வழக்கிற்கு பின்னிட்டு வருவாய் துறையில் ஆட்சேபனை தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். வழக்கிற்கு பின்னிட்டு ஆட்சேபனை தெரிவித்ததற்கு இந்நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் என்ன ஆவணங்கள் என்று வழக்கறிஞருக்கு தான் தெரியும். நான் ஆட்சேபனை தெரிவித்தேன் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து முழுவதும் வாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றும் நானும் என் சகோதரர்கள் 12.06.2022 தேதியில் அவர் அனுபவத்தை தடுத்ததால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல மேற்படி சம்பவம் நடைபெறவில்லை.

7. சர்வே எண்.234/2 இல் இருந்த 2 ஏக்கர் 8 செண்டில் என் தந்தைக்கும் உடன் பிறந்தவர்கள் கணேசன், மற்றும் ஆறுமுகம் 1988 ஆண்டிற்கு முன்பே வாய்வழியாக பாகப்பிரிவினை செய்யப்பட்டு அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களுக்கு முறையா உட்பிரிவு செய்யப்பட்டு என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை என் தகப்பனாரும் அவர்களின் வாரிசு தாரர்களுக்கும் கணேசன் அவர்களின் வாரிசுகளும் ஆறுமுகம் அவர்களின் வாரிசுகளும் ஏற்கனவே விற்பனை செய்துவிட்டதால் தாவா சொத்து மற்றும் இதர சொத்துகளில் எந்த வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வாதியின் அனுபவத்தை தடை செய்ய பிரதிவாதிகள் ஆகிய எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும் தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.